# EASTERN UNIVERSITY, SRI LANKA

# FACULTY OF COMMERCE AND MAMAGEMENT

## EXTERNAL DEGREE PROGRAMME

13 OCT 2014

**First Examination in Bachelor of Business Administration - 2009/2010/ Bachelor of Economics - 2010/2011 (August / September 2014) (Repeat)**

**EXB/EXE 1084 Financial Accounting**

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக — நேரம்: 3 மணித்தியாலங்கள்

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது

---

01. திரு.சந்திரன் என்னும் தனிவியாபாரியின் கணக்கேடுகளிலிருந்து 31.12.2013 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி பின்வருமாறு :

| விடயங்கள் | வரவு ரூபா. | செலவு ரூபா. |
|---|---|---|
| மூலதனம் | | 732000 |
| எடுப்பனவுகள் | 72000 | |
| கொள்வனவுகள் | 1275000 | |
| விற்பனைகள் | | 2250000 |
| நிலையான சொத்துக்கள் (கிரயத்தில்) : காணி கட்டடம் | 600000 | |
| தளபாடம் பொருத்திகள் | 150000 | |
| மோட்டார் வாகனம் | 570000 | |
| 15% வங்கிக்கடன் | | 150000 |
| வங்கிக்கடன் வட்டி | 11250 | |
| 01.01.2013 இல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு: | | |
| காணி கட்டடம் | | 60000 |
| தளபாடம் பொருத்திகள் | | 30000 |
| மோட்டார் வாகனம் | | 170000 |
| வாடகை வரி, காப்புறுதி | 31500 | |
| வாடகை வரி, காப்புறுதி சென்மதி 01.01.2013 இல் | | 2500 |
| மின்சாரம் | 37350 | |
| மின்சாரம் சென்மதி 01.01.2013 இல் | | 4000 |
| காகிதாதிகள் | 5400 | |
| விற்பனையாளர் சம்பளம் | 66000 | |
| அலுவலக சம்பளம் | 36000 | |
| மோட்டார் வாகனப் பராமரிப்பு | 42000 | |
| விற்பனைத் தரகு | 36000 | |
| விளம்பரம் | 75000 | |
| அறவிடமுடியாக் கடன் | 6000 | |
| பெற்ற கழிவு | | 10500 |

| | | |
|---|---|---|
| கொடுத்த கழிவு | 13500 | |
| வெளிச்சென்ற வண்டிக்கூலி | 55500 | |
| உள்வந்த வண்டிக்கூலி | 31500 | |
| 01.01.2013 இல் ஐயக்கடனுக்கான ஏற்பாடு | | 6000 |
| கடன்கொடுத்தோர் | | 140000 |
| கடன்பட்டோர் | 90000 | |
| 10% முதலீடுகள் | 75000 | |
| கொள்வனவுத் திரும்பல் | | 45000 |
| விற்பனைத் திரும்பல் | 60000 | |
| காசும் வங்கியும் | 66000 | |
| 01.01.2013 இல் இருப்பு | 195000 | |
| | **3600000** | **3600000** |

**மேலதிகத் தகவல்கள்:**

1. 31.12.2013 இல் இருப்புக்கள் – ரூபா. 200000

2. 31.12.2013 இல் சென்மதியாவுள்ள செலவுகள்: மின்சாரம் - ரூபா. 2650
   வாடகை வரி - ரூபா. 5000

3. முற்பணமாகச் செலுத்திய விளம்பரம் - ரூபா. 12000

4. கடன்பட்டோரிலிருந்து ரூபா. 10,000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிப்பு செய்யப்படல் வேண்டும். மிகுதிக்கடன்பட்டோரில் 10% ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

5. நிலையான சொத்துக்கள் மீதி பின்வருமாறு பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்:
   காணி கட்டடம் - ஆண்டுக்கு 5% கிரயத்தில்
   தளபாடம் பொருத்திகள் - ஆண்டுக்கு 10% கிரயத்தில்
   மோட்டார் வாகனம் - ஆண்டுக்கு 20% குறைந்து செல் மீதியில்

**வேண்டப்படுவது :**

திரு.சந்திரன் என்னும் தனிவியாபாரியின் 31.12.2013 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார, இலாப நட்டக்கணக்கையும் அத்திகதியில் உள்ளவாறான ஐந்தொகையையும் தயாரிக்குக.

(செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக.)

**(35 புள்ளிகள்)**

02. முகுந்தன் என்னும் தனிவியாபாரி தனது கணக்கேடுகளை முறையாகப் பேணுவதில்லை. ஆயினும் 31.12.2013 இல் முடிவுற்ற தனது நிதியாண்டுக்கு பின்வரும் தகவல்களை வழங்கக்கூடியவராக உள்ளார்.

**வங்கிக் கணக்கின் சுருக்கம்**

| | ரூபா |
|---|---|
| கடன் கொடுத்தோருக்குச் செலுத்தியது | 75000 |
| தளபாடம் வாங்கியது | 3600 |
| சம்பளம் செலுத்தியது | 1800 |
| வங்கியில் இட்டது | 94000 |
| வாடகை செலுத்தியது | 6600 |
| முதலீடு செய்தது | 11000 |

**ஏனைய மீதிகள்**

| | 01.01.2013 | 31.12.2013 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கட்டடம் | 75000 | 70000 |
| தளபாடம் | 12000 | 15000 |
| இருப்புக்கள் | 9500 | 8000 |
| கடன்பட்டோர் | 24400 | 27500 |
| கடன் கொடுத்தோர் | 19200 | 22500 |
| முற்பண வாடகை | 400 | - |
| சம்பளம் சென்மதி | - | 300 |
| வங்கி மீதி | 5200 | 1200 |
| காசு மீதி | 1900 | 2400 |

**ஏனைய தகவல்கள் :**

i. முகுந்தன் ஆண்டுக் காலத்தில் வாராந்தம் ரூ.100 வைத் தனது சொந்த பாவனைக்காக வியாபாரத்திலிருந்து பற்றியிருந்தார்.
ii. காசாகச் செலுத்திய மின்கட்டணம் ரூ.1200
iii. பெறவேண்டிய முதலீட்டு வருமானம் ரூ. 1250
iv. ஆண்டுக் காலத்தில் நிலையான சொத்துக்கள் எதுவும் விற்பனை செய்யப்படவில்லை.

**வேண்டப்படுவது :**

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. காசேடு (இரட்டை நிரல்)
ii. 31.12.2013 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார, இலாப நட்டக் கணக்கு
iii. 31.12.2013 இல் உள்ளவாறான ஐந்தொகை

(25 புள்ளிகள்)

03. குகன் என்னும் வியாபாரியின் 30.06.2014 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் தொங்கல் கணக்கு ஒன்றில் இடப்பட்டு பரீட்சை மீதி இணங்கச்செய்யப்பட்ட பின்னர் இறுதிக்கணக்குகள் தயாரிக்கப்பட்டன. பின்னர் அடுத்த நிதியாண்டில் ஏடுகளைப் பரிசோதித்த போது பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(i) விற்பனை நாளேடு ரூ.10000 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.

(ii) ரொகானுக்கு விற்பனை ரூ.25000 ரூபன் கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்டிருந்தது.

(iii) கொள்வனவு நாளேடு ரூ.1000 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.

(iv) பெற்றகழிவு ரூ.3200 கொடுத்தகழிவுக் கணக்கில் வரவில் பதியப்பட்டிருந்தது.

(v) மோட்டார் வாகன விற்பனை ரூ.15000 விற்பனைக் கணக்கில் தவறுதலாக செலவு வைக்கப்பட்டிருந்தது.

(vi) செலுத்திய வாடகை ரூ.6900 அக்கணக்கில் பிழையாக ரூ.9600 என பதியப்பட்டிருந்தது.

(vii) 01.01.2014 இல் ரூ.30000 க்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த தளபாடம் தவறுதலாக கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. தளபாடம் மீதான பெறுமானத்தேய்வு கிரயத்தில் ஆண்டுக்கு 10% ஆகும்.

**வேண்டப்படுவது:**

(a) மேற்கூறிய வழுக்களைத் திருத்துவதற்கான (இறுதிக்கணக்குகள் தயாரிக்கப்பட்ட பின்னர்) நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக (விளம்பல்கள் அவசியமில்லை).

(b) தொங்கல் கணக்கினை தயாரிக்குக.

(c) இலாபநட்ட செம்மையாக்கல் கணக்கினை தயாரிக்குக.

**(20 புள்ளிகள்)**

04. செல்லையா எனும் வியாபாரியின் காசேட்டின் வங்கி நிரல் 31.12.2013 இல் ரூ.30500 வரவு மீதியைக் காட்டியது. ஆனால் அதே மாதத்திற்கான அவரது வங்கிக் கூற்று வேறு ஒரு மீதியைக் காட்டியது. காசேட்டையும் வங்கிக் கூற்றையும் ஒப்பிடும் பொழுது பின்வரும் வேறுபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

(i) கடன்கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட காசோலை ரூ.25700 அத் திகதி வரை வங்கியில் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ.72500 காசோலைகளில் ரூ.51000 மாத்திரமே 31.12.2013 வரை வங்கியால் சேகரிக்கப்பட்டிருந்தது.

(iii) வங்கியால் பெறப்பட்ட பங்கிலாபம் ரூ.4800 காசேட்டில் பதியப்படவில்லை.

(iv) வங்கியால் செலுத்தப்பட்ட மின்கட்டணம் ரூ.3250 காசேட்டில் இடம்பெறவில்லை.

(v) காசேட்டின் செலவுப் பக்க கூட்டுத்தொகை ரூ.1500 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது

(vi) வங்கிக் கட்டணம் ரூ.2000 காசேட்டில் பதியப்படவில்லை.

**வேண்டப்படுவது:**

(i) காசேட்டை திருத்துக.

(ii) திருத்திய காசேட்டின் படியான வங்கி மீதியை அடிப்படையாகக் கொண்டு 31.12.2013 இல் உள்ளவாறான வங்கிக்கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிக்குக.

**(20 புள்ளிகள்)**